**Copy of Deposition**

**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.**

**அ.வ.எண். 262/2024 நாள்: 21.04.2026**

**வா.சா:– 1 நந்தினி ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

குறுக்கு விசாரணை ( 7 மற்றும் 9ம் பிரதிவாதிகள் தரப்பில்):–

எனது தாயார் சின்ன பொன்னம்மாள் பிறந்த ஊர் குப்பம்பாளையம் என்றால் சரிதான். எனது அப்பா ராமசாமி கவுண்டரின் ஊர் சிட்டபுள்ளா பாளையம் என்றால் சரிதான். எனது அப்பா அம்மாவிற்கு எங்கு வைத்து எப்போது திருமணம் நடந்தது என்றால் தெரியாது. எனது பெற்றோருக்கு திருமணம் ஆகி எத்தனை ஆண்டுகள் கழித்து நான் பிறந்தேன் என்றால் எனக்கு தெரியாது. எனது அம்மா இறந்துவிட்டதால் எனக்கு எந்த விவரமும் தெரியாது. எனது பெற்றோருக்கு திருமணம் ஆகி எத்தனை ஆண்டுகள் கழித்து எனது அம்மா இறந்தார் என்றால் நான் பிறந்த அடுத்தநாள் எனது அம்மா இறந்து விட்டார் எனது பெற்றோருக்கு திருமணம் ஆகி எத்தனை ஆண்டுகள் கழித்து என் அம்மா இறந்தார் என்று தெரியாது. எனது தாயார் 10.03.1979ல் இறந்துவிட்டார் என்று எனது வாதுரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் தேதி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனது அம்மாவின் இறப்பு சான்றிதழ் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் முதலில் 10.03.1979ல் என்று தாக்கல் செய்துவிட்டு, 07.06.1979ல் இறந்ததாக பின்னிட்டு தாவாவை திருத்தம் செய்ததற்கு ஆதரவாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சிட்டப்பிள்ளாபாளையம் ராமசாமிக்கும் சின்ன பொன்னம்மாளுக்கும் எந்த தேதியிலும் திருமணம் ஆகவில்லை என்றால் சரியல்ல. எனது அம்மா, அப்பாவிற்கு திருமணம் நடந்தது உண்மை. இந்த வழக்கிற்காக சிட்டபுள்ளாபாளையம் ராமசாமிக்கும் சின்ன பொன்னம்மாளுக்கும் திருமணம் நடந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ராமசாமி கவுண்டருக்கும், சின்னப்பொன்னம்மாளுக்கும் திருமணம் நடந்த பின்னிட்டு மீனாட்சி அம்மாள் என்பவரை திருமணம் செய்து கொண்டார் என்று கூறியுள்ளேன். ராமசாமி கவுண்டருக்கும், சின்னப்பொன்னம்மாளுக்கும் திருமணம் நடந்து எத்தனை வருடங்கள் கழித்து எப்போது ராமசாமி கவுண்டருக்கும், மீனாட்சி அம்மாளுக்கும் திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. ராமசாமி கவுண்டரின் முதல் மனைவி

## Copy of Deposition

பொன்னம்மாள் இறந்து 65 வருடங்கள் ஆகிறது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. முதல் மனைவி இருந்தது பற்றி சொல்லி கேள்விப்பட்டுள்ளேன், அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வாதுரையில் முதல் மனைவி இறந்து 65 வருடங்கள் ஆகிறது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் பெரியவர்கள் சொன்னதை வைத்து கூறியுள்ளேன். அந்த பெரியவர்களை சாட்சியாக இந்த வழக்கில் விசாரிக்கிறேனா என்றால் விசாரிக்க வேண்டும் என்றால் விசாரிக்கலாம். எனக்கு என்ன வயது என்றால் 47. 2ம் பிரதிவாதி ராமசாமி கவுண்டருக்கும் மீனாட்சி அம்மாளுக்கும் பிறந்த சக்திவேல் வயது 57 என்றால் அவர் கொடுத்த ஆவணப்படி 57தான். 3ம் பிரதிவாதி குணசேகரனுக்கு வயது 53 என்றால் அவர்கள் சொன்னதை வைத்து போட்டுள்ளேன். சரியான வயது தெரியாது. 4ம் பிரதிவாதி லட்சுமிக்கு 52 வயது என்றால் அவர்கள் சொன்னதை வைத்து போட்டுள்ளேன். எனக்கு சரியான வயது தெரியாது. மேற்படி விவரங்களை எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் பிறப்பதற்கு முன்பே ராமசாமி கவுண்டருக்கும், மீனாட்சி அம்மாளுக்கும் மேற்படி மூவரும் பிறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். ராமசாமி கவுண்டருக்கும், சின்னப்பொன்னம்மாளுக்கும் திருமணம் நடந்தது என்பதை காட்ட எவ்வித ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எங்கே படித்தேன் என்றால் கொடுமுடி ஸ்ரீசங்கர வித்யாசாலா பள்ளியில் படித்துள்ளேன். அந்த பள்ளியில் எனது சான்றிதழ் இருக்கும் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.22 பிறப்பு சான்றிதழுக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சம்பந்தம் உள்ளது. வா.த.சா.ஆ.22 பிறப்பு சான்றிதழில் தாயார் பெயர் பொன்னம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், எனது தாயார் பெயர் பிறப்பு சான்றிதழில் சரியாக இல்லை என்றால் என் அம்மாவின் பெயரும், அவரது சகோதரி பெயரும் பொன்னம்மாள் என்பதால் என் அம்மாவை சின்ன பொன்னம்மாள் என்று அழைப்பார்கள். பொன்னம்மாள் என்ற பெயரில் எனக்கு பெரியம்மாவே இல்லை என்றால் இருக்கிறார். இந்த வழக்கிற்காக கூப்பிடுகிற பெயர் சின்ன பொன்னம்மாள்

என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது வாதுரையில் எனது அம்மா பெயர் பொன்னம்மாள் என்றும், அவரை சின்ன பொன்னம்மாள் என்று அழைப்போம் என்ற குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது அம்மாவை சின்ன பொன்னம்மாள் என்று அழைப்பது பற்றி நேரில் தெரியுமா என்றால் தெரியாது. வீட்டில் இருப்பவர்கள் சொல்லி போட்டுள்ளேன். பிறப்பு சான்றிதழில் தாய், தந்தையரின் நிலையான வீட்டு முகவரி கொடுமுடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிட்டபுள்ளாபாளையம் என்று போடவில்லை என்றால் சரிதான். நந்தினி என்கிற பெயரே பிறப்பு சான்றிதழில் 2003ல்தான் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. நான் பள்ளியில் படிக்கும் போது எனது பெயர் ராணியா என்றால் இல்லை. நந்தினி. எனது பெயர் பள்ளி சான்றிதழில் ராணி என்றால் சரியல்ல. நந்தினி. நான் வேறு ஒருவரது பிறப்பு சான்றிதழை இந்த வழக்கிற்காக எனது பிறப்பு சான்றிதழ் என்று கூறி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.23 ஆதார் அட்டை என்னுடையதுதான். ஆதார் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் சரியானதுதான் என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI (Digitally signed by P SRIDEVI Date: 2026.04.21 12:12:00 +0200)<br>Subordinate Judge,<br>Kodumudi |